வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3865 /ஆ4/ 2023, நாள் 26.02.2024

– – –

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – மார்ச்–2024 மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – தேர்வுமையம் மற்றும் அறைகண்காணிப்பாளர்களுக்கான கூட்டம் சார்ந்த விவரங்கள் கோருதல் –சார்பு

=========

வேலூர் மாவட்டம் – மார்ச்–2024 மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் , இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மையத்தில் அறைகண்காணிப்பாளர்களாக பணிபுரிய உள்ள ஆசிரியர்களுக்கான அறைகண்காணிப்பாளர்களுக்கான ஆணைகள் வேலூர்,காட்பாடி,(SSA)ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலகத்தில் இன்று 26.02.2024 பிற்பகல் 2 மணி முதல் 4.00 மணிக்குள் முகப்புக்கடிதத்துடன் பெற்றுக்கொள்ளுமாறு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 27.02.2024(செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு தங்கள் தேர்வு மையத்திற்கு போதுமான அறை கண்காணிப்பாளர்கள் வருவதை உறுதி செய்து கொண்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழி படிவத்தை பூர்த்தி செய்து சார்ந்த வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்தில் ஒப்படைக்குமாறு தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் பூர்த்தி செய்த உறுதி மொழி படிவத்தினை சார்ந்த அனைத்து தேர்வுமைய முதன்மைக்கண்காணிப்பாளர்களிடமிருந்து பெற்று 28.02.2024 அன்று மாலை 6 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஆ4 பிரிவில் தவறாமல் ஒப்படைக்குமாறு அனைத்து வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :
உறுதி மொழி படிவம்

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர் .

பெறுநர் ,

1.சார்ந்த தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் /துறை அலுவலர்
2. சார்ந்த வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள்I &II
நகல்
1.வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/ தனியார்) தொடர் நடவடிக்கையின் பொருட்டு

# உறுதிமொழி

| | | |
|---|---|---|
| தேர்வு மைய எண் | 246 | |
| தேர்வு மையத்தின் பெயர் | | |
| தேர்வு நடைபெறும் பள்ளி வளாகம் மற்றும் தேர்வு அறைகள் சுத்தமாக உள்ளது | | |
| தேர்வு அறைகளில் மின் விளக்கு மற்றும் மின் விசிறி வசதிகள் உள்ளது | | |
| தேர்வு மையத்தில் கழிவறை மற்றும் சுத்தமான குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது | | |
| தேர்வு மையத்திற்கான முகப்பு தாட்கள் தைக்கப்பட்டு அனைத்து பாடங்களுக்கும் அனைத்து நாட்களுக்கும் தயாராக உள்ளது | | |
| தேர்வு மையத்திற்கு தேவையான அறை கண்காணிப்பாளர்கள் வருகை புரிந்து அறை கண்காணிப்பாளர்களுக்கான கூட்டம் ____________ நாளன்று நடத்தப்பட்டது | | |
| தேர்வுக்கான அனைத்து எழுது பொருட்களும் போதுமானதாக உள்ளது | | |
| மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுப் பணிக்கான முன் ஏற்பாடு வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்கிறேன் | | |

தேர்வு மைய
துறை அலுவலர்

தேர்வு மைய
முதன்மை கண்காணிப்பாளர்